கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

OS.No. 458/2023

திரு. செந்தில்குமார் (P.W. –1) **07.11.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. 15.10.2025 ஆம் தேதி விசாரணையில் சொல்லப்பட்டுள்ள வீனா கம்பெனி உரிமையாளர் மற்றும் அந்த வங்கி கணக்கின் விவரங்களை முதல் விசாரணை வாக்குமூலத்திலோ தாவா வழக்குரையிலோ நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். வீனா ப்ளீச்சிங் கம்பெனி எப்போது ஆரம்பிக்கப்பட்டது.

2. அதன் உரிமையாளர் யார் என்ற விவரங்கள் முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரி. இப்போது தான் தாக்கல் செய்கிறேன் 1993 ஆம் வருடம் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. அதன் உரிமையாளர் செந்தில்குமார் மட்டும் தான். அதன் விவரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த நிறுவனம் கூட்டாண்மை நிறுவனம். அதனால் தான் அந்த விவரங்களை முன்பே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. வீணா கம்பெனியில் இரண்டாம் பிரதிவாதியும் ஒரு பங்குதாரர் அந்த நிறுவனத்திற்கு உரிய ஜிஎஸ்டி வரி விபரங்களை எடுத்தால் அது தெரிந்துவிடும் என்றால் தவறு. அதில் இரண்டாம் பிரதிவாதி உரிமையாளராகவோ கூட்டாண்மை பங்குதாரராகவோ இல்லை. ஜிஎஸ்டி விவரங்கள் எடுத்தால் என் பெயர் மட்டும் தான் இருக்கும். இரண்டாம்

பிரதிவாதி அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் தவறு. இந்த சங்கதிகள் எல்லாம் மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. இந்த சங்கதிகள் எல்லாம் மறைத்துள்ளதால் தான் 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்களுக்கு முறையான எதிர்உரை தாக்கல் செய்ய தவறி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி எதிர் கோரிக்கை மனுவில் கோரி உள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 22.05.2023 ம் தேதி உறுதிமொழி பத்திரம் முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தது என்றால் சரி. அந்த ஆவணம் எப்படி என்னிடம் வந்தது என்றால் தாவா சொத்திற்கான மொத்த தொகையை நான் செலுத்தி இருந்ததால் அந்த ஆவணம் என்னிடம் இரண்டாம் பிரதிவாதி கொடுத்தார். அதனால் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் ஒன்னு ரெண்டு பிரதிவாதிகள் சேர்ந்து கொண்டு உறுதிமொழி ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளீர்கள் என்பது நிரூபணம் ஆகிறது என்றால் தவறு.

5. 2ம் பிரதிவாதியுடன் எனக்கு நல்ல உறவு முறை உள்ளதா என்றால் உள்ளது. அப்படி இருக்கும் சூழ்நிலையில் ஏன் அவரை வாதியாக சேர்க்காமல் பிரதிவாதியாக சேர்த்தீர்கள் என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. இரண்டாம் பிரதிவாதியுடன் சேர்ந்து நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் தான் தாவாவில் ஒரு பாதுகாப்பிற்காக அவரை பிரதிவாதியாக காண்பித்து உள்ளேன் என்றால் தவறு. வா.சா.ஆ–6 ஆவணம் தொடர்ச்சியாக சரியான தேதிகளுடன் வங்கி பரிமாற்றங்கள் இல்லை என்றால் சரியல்ல. பொய்யான ஆவணத்தை தாக்கல் செய்து தவறாக தாவாவை நடத்தி வருகிறான் என்றால் சரியல்ல. உறுதிமொழி ஆவணம் என்னிடம் இருந்து

அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால் நானும் 2ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு பொய்யான தாவாவை தாக்கல் செய்து உள்ளோம் என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.07 16:45:09 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.